# DEPOSITION OF WITNESS

IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM

**Spl.Sessions Case No.1/2025**

அ.சா.9

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | திரு. ராஜ்குமார் | Caste: | |
| Father's Name: | பாலசுப்பிரமணியம் | Calling: | சார்பு ஆய்வாளர் |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | 35 |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 16.03.2026

( 1,3 எதிரிகள் ஆஜர். 2ம் எதிரி ஆஜர் இல்லை .BNSS பிரிவு 355-ன் கீழ் மனு அனுமதிக்கப்பட்டுள்ளது.)

**முதன்மை விசாரணை**

நான் தற்போது நயினார்கோவில் காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 10.10.2024ம் தேதி இரவு 09.00 மணியளவில் அபிராமம் காவல்நிலையத்தில் அலுவலில் இருக்கும்போது கமுதி தாலுகா முத்துவிஜயபுரம் கிராமத்தை சேர்ந்த சண்முகம் மகன் ஹரிகிருஷ்ணன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரை பெற்று அதன் தன்மைக்கேற்ப அபிராமம் காவல்நிலைய கு.எண். 137/2024 சட்டப்பிரிவுகள் 296(b), 126(2), 115(2), 351(2) BNS and sec 3(1)(r), 3(1)(s) of SC/ST (POA) Act ன் படி வழக்கு பதிவு செய்தேன். அதன் அசல் முதல் அறிக்கையையும் புகார் மனுவையும் இணைத்து இந்நீதிமன்றத்திற்கும், ஒரு நகலை கமுதி உட்கோட்ட காவல்துணைக் கண்காணிப்பாளருக்கும் புலன் விசாரணைக்காக அனுப்பி வைத்தேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.5.**

C MOHAN RAM

Digitally signed by C MOHAN RAM
Date: 2026.03.16 17:55:05 +0530

இதுசம்பந்தமாக கமுதி உட்கோட்ட காவல்துணைக் கண்காணிப்பாளர் என்னை விசாரித்தார்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-

இவ்வழக்கின் புகார்தாரர் ஹரிகிருஷ்ணனுக்கும் எதிரிகளுக்கும் இடப்பிரச்சனை இருந்த விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். புகாரில் சொல்லியுள்ள சொத்தின் அனுபவம் வழக்கு சம்பவம் நடைபெறுவதற்கு முன்பு எதிரிகள் வசம் இருந்தது என்றால் தெரியாது. புகாரில் சொல்லப்பட்டுள்ள சொத்தை பாலமணி என்பவரிடமிருந்து புகார்தாரர் ஹரிகிருஷ்ணன் கிரையம் வாங்கியுள்ளார் என்றால் அவ்வாறு புகாரில் குறிப்பிடப்பட்டுள்ளது. பாலமணி என்பவர் எதிரிகளுக்கு அக்கா மகள் என்றால் தெரியாது. எதிரிகள் புகாரில் சொல்லியுள்ள சொத்தின் அனுபவத்தை இவ்வழக்கின் புகார்தாரர் ஹரிகிருஷ்ணன் தடையும் இடைஞ்சலும் செய்வதாக கூறி பலமுறை எங்கள் காவல்நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார்கள் என்றால் ஒருமுறை கொடுத்துள்ளார்கள். அந்த புகார் இவ்வழக்கு சம்பவம் சம்பந்தமாக வழக்கு பதிவு செய்யப்படுவதற்கு முன்பு கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். புகார்தாரர் ஹரிகிருஷ்ணன் எதிரிகளிடமிருந்து சொத்தை அபகரிக்க வேண்டும் என்பதற்காக பொய்யாக புகார் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. புகாரில் கண்ட சங்கதிகள் அனைத்தும் பொய் என்றால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்றும், நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கவில்லை

C MOHAN RAM

Digitally signed by C MOHAN RAM
Date: 2026.03.16 17:55:10 +0530

என்றும் சொன்னால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

C MOHAN RAM

Digitally signed by C MOHAN RAM
Date: 2026.03.16 17:54:51 +0530

Sessions Judge,
Special Court for Trial of Cases Registered under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)